**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.62
https://ngmtamil.in/

# போரைத் தடுத்த ஊடகவியலாளர்கள்

**முனைவர் சி தீபா,**

இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, PSGR கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,

பீளமேடு, கோயம்புத்தூர்.

**முன்னுரை**

பழந்தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களையும் குறுநில மன்னர்களையும் வள்ளல்களையும் உலகிற்கு எடுத்துக்காட்டிய பெருமை சங்க காலப் புலவர்களையே சாரும். புலவர்கள் பாடல்கள்பாடி பரிசில் பெற்று வாழ்ந்தனர். அதோடு அமையாது, அரசர்களிடம் காணும் குறைகளை எடுத்துக் கூறி அவர்களைத் திருத்தினர் .பகை அரசர்களுக்கும் அறிவுரை கூறி அவர்களை நண்பர்களாக்கினர். அரசியலில் நெறி பிறழ்ந்த மன்னர்களை இடித்துரைத்தனர்..

அரசர்களும் புலவர்களை அருமை நண்பராகவே போற்றி வந்தனர். புலவர்களின் அறிவுரைகளில் ஒன்றாகத்தான், புலவர்கள் அரசர்கள் போரிட்ட போர்க்களத்திற்கே சென்றனர். அங்கு நிகழ்ந்த போரையும் அதன் அழிவுகளையும் அதன் விளைவுகளையும் கண்டு போரைத் தடுக்கும் அறவுரைகளைக் கூறித் தடுத்தனர். அமைதியான சமுதாயத்தை உருவாக்கிய மிகச்சிறந்த ஊடகவியலாளர்களாகிய புலவர்களை அடையாளம் காட்டும் வகையில் இக்கட்டுரை இடம்பெறுகின்றது.

**போரைத் தடுத்த புலவர்கள்**

கபிலர், கோவூர்கிழார், ஆலத்தூர் கிழார், புல்லாற்று எயிற்றியனார் போன்ற புலவர்கள் மூவேந்தர்களாகிய சேர, சோழ ,பாண்டியர் மற்றும் குறுநில மன்னர்களுக்கிடையே ஏற்பட்ட போர்களை தங்கள் அறிவுரையால் தடுத்து நிறுத்திய வரலாற்றுச் சிறப்புகளை நமது இலக்கியங்கள் வழியாக காண முடிகின்றது .

சங்க காலப் புலவர்கள் மன்னனைப் பாராட்டி பாடல்களைப் பாடி பரிசுகள் பெற்றிருந்தாலும் மன்னனுக்கே அறிவுரை கூறும் அளவிற்கு அவர்கள் புகழ் உயர்ந்திருந்தது. மன்னர்களும் அவர்களது அறிவுரைகளைக் கேட்டிருந்தனர். அவர்களின் அறிவுரைகளை மனதில் ஏற்று நடந்தால் இன்றைய உலகமும் ஓர் அமைதிப் பூங்காவாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

போர் என்பது இயல்பானது இயற்கையானது.போர்க்குணம் என்பது தமிழரின் பண்பாட்டில் ஒரு பெரும் சிறப்பாகக் போற்றப்பட்டுள்ளது என்பதனை நமது இலக்கியங்கள் வழியாகக் காண முடிகிறது.

சோறு படுக்கும் தீயோடு
செஞ்ஞாயிற்றுத் தெறல் அல்லது
பிறதெறல் அறியார் நின் நிழல்
வாழ்வாரே" (புறநானூறு 20)

என்று ,பகைத்தீ இல்லாத நாடு நல்நாடு என்பதை அக்காலச் சான்றோர் பெருமக்கள் வலியுறுத்தியுள்ளனர்

**ஆலத்தூர் கிழார் (புறநானூறு 36)**

கல்வி அறிவு ,ஒழுக்கம் முதலிய நற்பண்புகளைக் கொண்டு பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர் ஆலத்தூர் கிழார். நூலறிவோடு, உலகியலறிவும், அரசியல் அறிவும் பெற்றவர். அரசராயினும் தவறு செய்த வழி இடித்துரைக்கும் ஆற்றலும் சான்றோர் கூட்டுறவும் கொண்டவர்.

சோழ அரசன் கரிகாற் பெருவளத்தான் மகனான கிள்ளிவளவன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்து வந்தான். சிறந்த கல்வி அறிவும், வீரமும், நெறிபிறழாமல் ஆட்சி நடத்தும் இயல்பினையும் கொண்டவன். சேர நாட்டில் குளமுற்றம் என்னும் ஊரில் சேரன் ஒருவனோடு போர் புரிந்து இறந்து போகிறான். அதனால் இவனைக் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்று கூறுவர் .

கருவூரை ஆண்டு வந்த சேர மன்னன் மீது கிள்ளிவளவன் பகைமை கொண்டிருந்தான் அப்பகை நாள்தோறும் வளர்ந்து வந்தது. கிள்ளிவளவன் நால்வகைப் படைகளோடு சென்று கருவூரை முற்றுகையிட்டான்.

இவனை எதிர்த்துப் போரிடும் ஆற்றல் இல்லாத சேரன் மதிலை அடைத்துக் கொண்டு உள்ளிருந்தான். புலவருக்கு இச்செய்தி தெரிந்தது ..மதிலுக்குள் அடைபட்டிருக்கும் குடிமக்கள் படும் துன்பம் கண்டு வருந்தினார்

ஒரு வீரன் தனக்கு இணையான ஒரு வீரனோடு போர் புரிதலே முறையாகும் என்பதை அறிந்தவர் புலவர். வளவனைக் கண்டு உனது படை வீரர் ஆன் பொறுனையாற்றங்கரையில் உள்ள காவல் மரங்களை எல்லாம் வெட்டுகின்றனர்.மரம் வெட்டும் ஓசை கேட்டும் சேரன் அரண்மனையை விட்டு வெளியே வந்து போர் புரிய அஞ்சி ஒளிந்திருக்கும் ஒருவனோடு நீ போர் புரிய நிற்பது பெரிதும் இழுக்காகும். இதனை அறிந்தால் எவரும் பழிப்பர் .நான் கூறும் இம்மொழிகளைக் கேட்டு சேரனைக் கொல்லாது விடினும் விடுக, அல்லது போர் புரிந்து கொன்றாலும் கொல்லுக என்று இதமாக எடுத்துரைத்தான்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

அடுநை ஆயினும், விடுநை ஆயினும்,

நீ அளந்து அறிதி, நின் புரைமை வார் கோல்,

செறி அரிச் சிலம்பின், குறுந் தொடி மகளிர்

பொலம் செய் கழங்கின் தெற்றி ஆடும்

தண் ஆன்பொருநை வெண் மணல் சிதை

( புறநானூறு 36 )

அவரது உரை கேட்ட வளவன் முற்றுகையை விட்டு உறையூருக்குச் சென்றான். அதன் பின்னர் பின்னாளில் அப்பகை வளரவே சேரனை வென்று கருவூரைக் கைப்பற்றினான் வளவன் என்று நப்பசலையார் என்னும் பெண் புலவர் பாடல் வழியாக அறிய முடிகிறது

**உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் (புறநானூறு13)**

சோழ நாட்டில் உறையூரில் அந்தணர் குலத்தில் மோசியார் என்னும் புலவர் பிறந்தார். இவர் பிறக்கும்போதே முடவராய் இருந்ததால் முடமோசியார் என்று வழங்கப்பட்டார். எதனையும் அஞ்சாது எடுத்துக் கூறும் துணிவையும் சிறந்த கல்வியறிவினையும் பெற்றவர் .

கரூவூரைத் தலைநகராகக் கொண்டு சேர நாட்டினை சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை என்பவன் ஆண்டு வந்தான். இவன் தமிழ்ப் புலவர்களிடம் பெருமதிப்புக் கொண்டவன்.

இத்தருணத்தில் மோசியாரின் பழைய நண்பராகிய கோப் பெறுநற்கிள்ளி என்னும் சோழன் என்பவன் தனது யானை மீது ஏறி உலா வந்தான். அப்போது அவன் யானை திடீரென மதம் கொண்டது .எவ்வளவு அடக்கியும் அடங்காது ஓடிவந்து கருவூர் எல்லையை அடைந்தது. வாள் மறவரும் பின் தொடர்ந்தனர்.மாடத்திலிருந்து சேரன் இக்காட்சியைக் கண்டான்.பகை அரசன் எவனோ தன்மீது போர் தொடுக்க வருகின்றான் என்று நினைத்து சினம் கொண்டான்.

புலவர் சோழனை முன்னமே அறிந்தவராதலால், யானை மீது வரும் சோழனின் யானை ஒழுங்கற்ற நிலையில் வருவதைப் புலவர் தன் நுண்ணறிவால் அறிந்தார் .

உடனே சேரனிடம் சோழனின் யானையின் நிலையை எடுத்துரைத்து அவன் மீது சினம் கொள்ள வேண்டாம் என்றும், மதம் கொண்ட யானை மீது ஏறிவரும் சோழனும் துன்பம் ஏதுமின்றி இனிது செல்வானாக என்றும் கூறினார். புலவரின் சொற்களைப் போற்றிய சேரனும் போரைத் தவிர்த்து, இனிது வாழ்ந்தான். இத்தகைய அருள் உள்ளம் படைத்த புலவர் பெருமக்களால் தான் அக்காலத்தில் அமைதி நிலவியது.

**ஔவையார் ( புறநானூறு 95)**

ஔவையார் அதியமானிடம் பேரன்பு கொண்டவர். அவனது நற்குணங்களைப் பல பாடல்களில் பாடியுள்ளார். அவனது அரண்மனையிலேயே தங்கி இருந்து அவனுக்கு அருமை நண்பராகவும், அரசியல் ஆலோசகராகவும் விளங்கினார்.

இந்நிலையில் தொண்டைமான் அதியமானோடு போர் புரியக் கருதினான். ஆனால் அதியமான் தொண்டைமான் தனக்கு இணையானவன் அல்லன் என்று போர் புரிய விரும்பவில்லை. அதியமானின் வலிமையை தொண்டைமான் அறிந்திருக்கவில்லை. இந்நிலை உணர்ந்த ஔவையார் தொண்டைமானிடம் தூது சென்று தொண்டைமானின் படைக்கலக் கொட்டிலுக்குச் சென்று, அங்கு நெய் பூசி ,மயில் பீலி அணிந்திருந்த படைக்கருவிகளையும், கொல்லன் பட்டறையில் முனை உடைந்து ,நுதி சிதைந்து கிடைக்கும் கிடக்கும் அதியமானின் படைக் கருவிகளையும் ஒப்பிட்டுக் கூறி, அதியமானின் வீரத்தினை இகழ்வது போலப் புகழ்ந்து தொண்டைமானுக்கு உணர்த்தி போரை நிறுத்திய புலவர் தான் ஔவையார். வீணாய் உயிரிழக்கும் போர் வீரர்களின் சமூகத்தைக் காத்த பெருமையை இவர் அடைகின்றார்

**கபிலர் (புறநானூறு 113)**

இனிய ஒழுக்கத்தையும் சிறந்த புலமையினையும் கொண்ட புலவர் கபிலர் .புலவர் சமுதாயத்தில் தலைமை இடம் பெற்றவர் இவர். தமிழகத்தை ஆண்டு வந்த சேர, சோழ, பாண்டியர்களை விட மேம்பட்ட புகழ்வாய்ந்தவன் பாரி வள்ளல் என்று பலரும் புகழ்ந்தனர். ஒரு குறுநில மன்னன் தம்மை விடப் புகழ் பெறுவதா? என்று பொறாமை கொண்ட மூவேந்தரும், பெரும் படையினைத் திரட்டிக்கொண்டு வந்து பறம்பு மலையை முற்றுகையிட்டனர்.

ஆனால் பல நாள் முற்றுகையிட்டும் மூவேந்தர்களால் பாரியின் அரணுக்குள் நுழைய முடியவில்லை. ஆற்றல் இல்லாத மூவேந்தர்கள் பாரியின் மகளிரை மணம் செய்து கொடுத்தால் போரைக் கைவிடுவதாகக் கூறினர் . இதனைக் கேட்ட பாரிக்கு சினம் பொங்கியது. போர் புரியப் படை திரட்டினான்.

போர் நடைபெற்றால் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழப்பர். எனவே போர் நடைபெறாமல் தடுக்க கபிலர் முயன்றார். மூவேந்தர்களைச் சந்தித்து நீங்கள் எவ்வளவு படைகளைத் திரட்டி வந்தாலும் பாரியின் பறம்பு மலையைக் கைப்பற்ற முடியாது. இப்பறம்பு மலை பகை அரசருக்கு அரியது .ஆனால் இரவலர்க்கு எளியது. இரப்பவர்க்கு இல்லை என்று சொல்லாதவன் பாரி. நீங்கள் பறம்பு மலையைப் பெற அது ஒன்றே வழியாகும் என்று கபிலர் கூறினார்.

அவனைப் போரில் வெல்ல இயலாது என்பதை உணர்ந்த மூவேந்தரும் முற்றுகையிலிருந்து பின் வாங்கினர்.அதன் பின்னர் சூழ்ச்சி செய்து ஆடிப்பாடி இரவலராய்ச் சென்று பாரியைக் கொன்றனர்.பின்னர் பாரியின் மகளிரைக் கபிலர் அழைத்துச் சென்று மணம் செய்து கொடுத்து நட்புக் கடனை நிறைவேற்றினார்.அவசியமில்லாமல் போர் நடக்கக் கூடாது என்ற சமுதாய நோக்கம் கொண்ட புலவர்கள் நம்மிடையே வாழ்ந்திருந்தனர்

**புல்லாற்றூர் எயிற்றியனார் ( புறநானூறு 213)**

கோப்பெருஞ்சோழன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டை ஆண்டு வந்தான் .இவன் செங்கோல் முறை தவறாதவன். வீரம், கொடை, கல்வி என்ற தகுதிகள் அனைத்தும் வாய்க்கப் பெற்றவன். கோப்பெருஞ்சோழனுக்கு மகன்கள் ஆலகாலம் போன்ற கொடியவர்களாக இருந்தனர். அவர்கள் தனது தந்தையாரையே எதிர்த்துப் போர் புரிந்து அரசைக் கைப்பற்றும் எண்ணம் கொண்டனர்.

அப்போது புலவர் எயிற்றியனார், கோப்பெருஞ்சோழனிடம் பரிசில் பெறுவதற்குச் சென்றிருந்தார். அப்போது தந்தையும் மக்களும் போர் செய்யப் போகும் கொடிய செயலைக் கண்டார். இந்நிலையில், அரசனின் புதல்வர்களுக்கு அறிவுரை கூறுவதை விட நன்கு பழகிய கோப்பெருஞ்சோழனுக்கு அறிவுரை கூறுவது சாலச் சிறந்தது என்ற முடிவுக்கு வருகிறார்.

அவர் சோழனிடம் அரசே! உலகில் வீரமுடைய அரசர்கள் தம் வீரச் செயல்களை உலகம் புகழ்வதற்குரிய நெறியில் செலுத்துவரே அல்லாமல், பழித்தலுக்குரிய வழிகளில் செலுத்தார். நீ இப்போது செய்ய இருக்கும் போர் பழிப்பினை உண்டாக்குமே அன்றி சிறிதும் புகழை உண்டாக்காது என்று எடுத்துக் கூறினார்.

நின்ற துப்பொடு நின்குறித்து எழுந்த
எண்ணில் காட்சி இளையோர் தோற்பின்,
நின்பெரும் செல்வம் யார்க்கும்எஞ் சுவையே?
அமர்வெஞ் செல்வ! நீ அவர்க்கு உலையின்,
இகழுநர் உவப்பப், பழியெஞ் சுவையே;
அதனால்,ஒழிகதில் அத்தை,நின் மறனே!வல்விரைந்து
எழுமதி; வாழ்க, நின் உள்ளம்! புறநானூறு 213

போர் என்பது ஒரு நாட்டின் அழிவு. ஒரு இனத்தின் அழிவு. போர்களில் பெற்றோர் தங்களது பிள்ளைகளையும் பிள்ளைகள் தங்களது பெற்றோரையும், மனைவி கணவனையும் இழப்பது உச்சகட்டக் கொடுமையாகும். உலகமெங்கும் மக்கள் அமைதியையே விரும்புகின்றனர் என்ற போதிலும் இன்றைய நிலையிலும் போர்கள் நடைபெற்று வருவதை நாம் கண்டு வருகின்றோம்.

**கோவூர்கிழார் (புறநானூறு 44,46)**

சோழன் நலங்கிள்ளி காவிரிப்பம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். ஈகை, அறிவு, கல்வி, கேள்வி களில் சிறந்தவன் சோழன்.நெடுங்கிள்ளி உறையூரில் இருந்து அரசாண்டு வந்தான். நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் அரசுரிமை காரணமாகப் பல இடங்களில் போர் நிகழ்ந்தன.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

ஒரு முறை இருவருக்கும் போர் மூண்டது. நலங்கிள்ளி நெடுங்கிள்ளியின் ஆவூர்க் கோட்டையை வளைத்துக் கொண்டான். நெடுங்கிள்ளியும் வெளியில் வரவில்லை. இதனால் ஆவூரில் உள்ள மக்கள் பெரிதும் துன்புற்றனர். உணவுப் பொருள்கள் குறைந்தன. மக்கள் பசியால் வாடினர்.

இச்செய்தி கோவூர்கிழாரின் செவிகளுக்கு வந்தது. புலவர் நெடுங்கிள்ளியைச் சந்தித்து, அரசே யானைகள் கவளம் கொள்ளாமல் கிடக்கின்றன. குழந்தைகள் பால் இல்லாமல் அழுகின்றன. குடிமக்கள் நீரின்றித் தவிக்கின்றனர்.. நீ வெளியே வந்து கோட்டைக் கதவைத் திறப்பாயாக. அல்லது நலங்கிள்ளியுடன் போர் புரிந்து வெல்வாயாக.இவை இரண்டும் இன்றிக், கதவினை அடைத்துக் கொண்டு இருப்பது நாணத்தைத் தரும் செயலாகும் என்று கூறிய அவரது அறிவுரையைக் கேட்டு கோட்டையைத் திறக்கின்றான்.

ஆவூர்க்கோட்டை நலங்கிள்ளி வசம் ஆகிறது. துன்பத்தில் வருந்திய ஆவூர் மக்கள் கோவூர்கிழாரின் அருஞ்செயல் கண்டு வாயார வாழ்த்தினர்.

அறவை ஆயின்,' நினது' எனத் திறத்தல்;
மறவை ஆயின், போரொடு திறத்தல்;
அறவையும் மறவையும் அல்லையாக,
திறவாது அடைத்த திண் நிலைக் கதவின்
நீள் மதில் ஒரு சிறை ஒடுங்குதல்
நாணுத்தகவு உடைத்து, இது காணுங்காலே

புறநானூறு 44

நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இருவருக்கும் இடையே போரை நிறுத்துவதற்குக் கோவூர்கிழார் இருவரிடமும் தனித்தனியே சென்று சமாதான முயற்சியை மேற்கொண்டார். உங்களில் யார் தோற்றாலும் அழியப்போவது சோழர் குலமே! இது பகைவர்க்கு மகிழ்வையே தரும். என்று அறிவுரை கூறுகிறார். இதனால் நெடுங்கிள்ளி நலங்கிள்ளியை விட்டுக்கொடுத்தான் என்று தெரியவருகிறது.

**முடிவுரை**

அக்கால அரசர்கள் புலவர்களை நண்பராகவும் மதிகூறும் நல்ல அமைச்சராகவும் கொண்டு அவர்கள் கூறும் பொன்மொழிகளை போற்றி வாழ்ந்தார்கள். போர்க்களம் சென்று போர் நடைபெறா வண்ணம் காத்து மக்கள் நன்மையடைய வழி வகுத்த புலவர் பெருமக்களின் அறச் செயல்களை இக்கட்டுரையின் வழியாக அறிய முடிகிறது .நடக்க இருந்த போர் நடவாது ஒழிந்து, நாட்டில் அமைதி நிலவ மக்கள் மகிழ வழி ஏற்பட்டது.

**துணை நூல்கள்**

[1.] புறநானூறு, கழக வெளியீடு.

[2.] சி. முத்துக்கிருட்டிண நாட்டார், போர் நீக்கிய புலவர்கள் ,1953,

[3.] பதிப்பு 2, அலையன்ஸ் கம்பெனி, சென்னை.

-----------------------------

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)